சுவிக்கின்! ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5.00

மடல் 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஐப்பசி 10 புதன்கிழமை (27.10.1993) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 333

# கொழும்பில் "ரயர்" போட்டு எரிக்க கிழக்கிலிருந்து தமிழர்கள் கடத்தல்!

## அம்பாறையிலிருந்து சடலங்கள் லொறியில் எடுத்து வரப்பட்டன!!

கொழும்பு, ஒக்டோபர் 27

கிழக்குப் பகுதியைச் சேர்ந்த தமிழ் இளைஞர்களை விசாரணை எதுவுமின்றிக் கூட்டிச்சென்று கொன்ற பின்னர், அவர்களின் சடலங்களை கொழும்பில் "ரயர்" போட்டு எரிப்பதற்காக வாகனங்களில் தெற்கே கொண்டு வரும் சம்பவங்கள் நடைபெறுவதாகப் புதிய தகவல்கள் வெளியாகி உள்ளன.

கடந்த வாரம் அம்பாறையைச் சேர்ந்த பத்து தமிழ் இளைஞர்களின் சடலங்கள் லொறி ஒன்றில் கொழும்பு நோக்கி எடுத்து வரப்பட்டதாகவும்—

சடலங்களை ஏற்றி வந்த கடலங்களைப் பொலிஸ் தடை முகாமில் நடந்த சோதனையின்போது சடலங்கள் இருப்பது கண்டறியப்பட்டதாகவும்—

லொறியில் அரசுடன் தொடர்புடைய பிரபல பாதுகாப்பு அமைப்பின் உயர் அதிகாரி ஒருவர் கூட வந்ததாகவும்— உயர்பீடக் கட்டளையின்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கிளாலிக் கடற் பரப்பில் படகுகள் மீது ஹெலி தாக்கு!

நேற்று முன்தினம் இரவு ஆலங்கேணியிலிருந்து உணவுப் பொருள்களை ஏற்றி வந்த படகுகள் மீது கிளாலிக் கடற் பகுதியில் வைத்து ஹெலியிலிருந்து றொக்கட் தாக்குதல் நடத்தப்பட்டது.

இதனால் படகில் ஏற்றிவரப்பட்ட மாடு ஒன்று பலியானது. படகின் முன் பக்கமும் சேதமுற்றது. எனினும் படகோட்டி படகை மூழ்கவிடாது கரைக்குக் கொண்டுவந்து சேர்த்தார்.

ஆலங்கேணியில் பொருள்களை ஏற்றிக் கொண்டிருந்த படகுகள் மீதும் ஹெலி றொக்கட் தாக்குதல் நடத்தியது. ஆதனால் இரு படகுகள் சேதமுற்றன.

இதேவேளை —

நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவில் முகமாலையில் உணவுப் பொருள்களை ஏற்றி வந்த வாகனங்கள் மீதும், கண்டி வீதியில் மீசாலை, சாவகச்சேரிப் பகுதியில் சென்ற வாகனங்கள் மீதும் ஹெலியிலிருந்து வேட்டுகள் தீர்க்கப்பட்டன.

# ஐ.தே.கவில் அநுரா!



## அமைச்சர் பதவியும் வழங்க இணக்கம்?

கொழும்பு, ஒக்டோபர் 27

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து வெளியேறிய அனுரா பண்டார நாயக்கா, ஆளும் ஐக்கிய தேசிய கட்சியில் சேர முடிவு செய்திருக்கிறார் என அறிவிக்கப்படுகிறது.

ஐ.தே.க. அரசில் சேர்ந்து கொள்வதற்கு அனுரா விருப்பத்தைத் தெரிவித்து, லண்டனிலிருந்து அனுரா பண்டார நாயக்கா தமக்குக் கடிதம் எழுதியிருப்பதாக ஐ.தே.க வின் பொதுச் செயலாளர் சிறிசேன கூரே தெரிவித்திருக்கிறார்.

கடந்த 11 ஆம் திகதி சு.கவை விட்டு வெளியேறிய

(6 ஆம் பக்கம் பார்க்க)

## சு.கவில் நெருக்கடி

அனுரா பண்டாரநாயக்கா ஐ.தே.கவில் சேர முடிவு செய்திருப்பதால்—

சுதந்திரக் கட்சியில் இருக்கும் அவரது நெருக்கமான ஆதரவாளர்கள் பலரும் அக்கட்சியை விட்டு வெளியேறி ஐ.தே.கவில் சேரலாம் எனக் கருதப்படுகிறது;

இதனால்—

சு.க. பெரும் அரசியல் நெருக்கடி ஒன்றை எதிர்நோக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பதாக அவதானிகள் தெரிவித்தனர்.

சு.க வை விட்டு அனுரா வெளியேறிய போது பெரும் நெருக்கடி ஏதும் அக்கட்சிக்குள் ஏற்படாத போதிலும்—

அவர் ஐ.தே.கவில் சேர முடிவு செய்ததை அடுத்து சு.கவுக்குள் நெருக்கடி தோன்றியிருப்பதாக மேலும் தெரிவிக்கப்பட்டது. (உ-6)

## அனுராவுக்கு எதிராக சு.கவில் சதி நடந்தது!

### அவருக்கு ஆதரவான எம். பி.தகவல்

கொழும்பு, ஒக். 27

சு. கவிற்குள் ஒரு சாரார் செய்த சதியினாலேயே அனுரா பண்டார நாயக்கா கட்சியை விட்டு வெளியேறி ஐ.தே.கவில் சேர வேண்டி ஏற்பட்டது.

சு. கவின் கம்பஹா மாவட்ட எம்.பியும் அனுராவின் நெருங்கிய ஆதரவாளருமான பிரதிப் சமரசிங்க இவ்வாறு கூறியிருக்கிறார்.

அனுராவின் முடிவு சு.க.வுக்கு பாரிய இழப்பாகும்.

அவரை மீண்டும் கட்சியில் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்றே காலதாமதம் காட்டப்பட்டது.

அனுராவைக் கட்சியில் மீளச் சேர்த்துக் கொள்ள தற்கு வசதியாக —

அவர் கட்சியிலிருந்து ராஜினாமாச் செய்து விட்டது குறித்து நாடாளுமன்றச் செயலாளர் நாயகத்துக்கு கடிதம் மூலம் அறிவிப்பதைத் தாமதப்படுத்துமாறு கே.பி. இரத்னாயக்கா, லக்ஷ்மன் ஜெயக்கொடி ஆகியோர் கட்சியின் பொதுச் செயலாளரான தர்மசிறி சேனநாயக்காவிடம் கோரினார். அதற்கு இணங்கி உறுதியளித்த கட்சிச் செயலாளர், திடீரென அதை மீறி கடந்த வெள்ளிக்கிழமை அக்கடிதத்தை அனுப்பி வைத்துவிட்டார். இது ஒரு முக்கிய சதித் திட்டமாகும்.

— இப்படி சமரசிங்க மேலும் குறிப்பிட்டார்.

# சு.கவில் பிளவை ஏற்படுத்த ஐ.தே.கவினர் செய்த சதி!

## சிறிமாவோ குற்றஞ் சாட்டுகிறார்

கொழும்பு, ஒக். 27

அனுராவைப் பதவி விலகச் செய்ததன் மூலம் சுதந்திரக் கட்சியில் பிளவை ஏற்படுத்த ஐக்கிய தேசியக்கட்சி சதி செய்கிறது.

சுதந்திரக்கட்சித் தலைவி சிறிமாவோபண்டாரநாயக்கா "சண்டே லீடருக்கு" அளித்த பேட்டி ஒன்றில் முன்கண்டவாறு குற்றஞ்சாட்டினார்.

ஐக்கிய தேசியக் கட்சியில் சேரும்படி அனுராவை அக்கட்சித் தலைவர்கள் அழைத்தது அனுராவின் மீது அவர்கள் கொண்டுள்ள விருப்பத்தினால் அல்ல; அனுராவையும் சுதந்திரக் கட்சியையும் அழிக்க விரும்பியே.

ஐ.தே.கவிலிருந்து வெளியேறிய சிலர் மீண்டும் அதில் சேர்ந்து கொள்ள முயற்சிக்கும் போது தாய்க்கட்சி மௌனஞ் சாதித்து வரும் ஐக்கிய தேசியக் கட்சியினர் அனுரா எமது கட்சியை விட்டு வெளியேறிய அடுத்த நிமிடமே, ஐக்கிய தேசியக் கட்சியில் சேர்ந்து கொள்ளும்படி அவருக்கு அழைப்பு விடுக்கின்றனர். அமைச்சரும் ஐ.தே.க. பொதுச் செயலாளருமான சிறிசேன கூரே இத்தகைய பகிரங்க அழைப்பை

(6 ஆம் பக்கம் பார்க்க)

### பல்கலைக்கழக அனுமதியில்

## பாதிக்கப்பட்ட மாணவர்கள் நாளை ஆர்ப்பாட்டப் பேரணி

யாழ்ப்பாணம், ஒக். 27

பல்கலைக்கழக அனுமதி பெறமுடியாது பாதிக்கப்பட்ட மாணவர்கள், பிரமாண்டமான ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நாளை நடத்தவுள்ளனர்.

பாதிக்கப்பட்ட மாணவர்கள் ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த ஆர்ப்பாட்டப் பேரணி, காலை 9 மணிக்கு யாழ் பல்கலைக்கழகத்திலிருந்து ஆரம்பமாகி செயலகம் வரை சென்று மீண்டும் பல்கலைக்கழக வளவை வந்தடையும்.

அரசாங்க அதிபர் திருமதி ஐ. நடராஜா, செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு, யாழ் செயலகம், கல்வித் திணைக்களம் ஆகிய அலுவலகங்களுக்குச் சென்று மகஜர்களைக் கையளிக்கக் கூடிய வகையில் பேரணியின் பாதை அமையும்.

பல்கலைக்கழக அனுமதியில் தமக்கு இழைக்கப்பட்ட அநீதியை நீக்கி, உரிய விகிதத்தில் அனுமதி வழங்கக்கோரி, பாதிக்கப்பட்ட மாணவர்கள் கையொப்பம் இட்டு ஜனாதிபதிக்கு அனுப்பும் மகஜர் அரச அதிபரிடம் கையளிக்கப்படும்.

உயர்கல்வி அமைச்சருக்குரிய மகஜர் கல்விப் பணிப்பாளரிடம் ஒப்படைக்கப்படும்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

### இவ்வாண்டு தயாரிக்கப்பட்ட

## நவீன ரஷ்ய ஹெலிகள் அவசரமாக வாங்க முயற்சி

கொழும்பு, ஒக். 27

எம் ஐ-17 iv ரக மூன்று ரஷ்ய ஹெலிகொப்டர்களை கொள்வனவு செய்வதற்கான கேள்விப்பத்திரங்களை பாதுகாப்பு அமைச்சு கோரியுள்ளது.

இது சம்பந்தமான அறிவித்தலில் விமானப்படைத் தலைமையகம் கூறியிருப்பதாவது;

சம்பந்தப்பட்ட ஹெலிகொப்டர்கள் 1993 இல் தயாரிக்கப்பட்டதாக இருக்க வேண்டும். அவற்றின் என்ஜின் புத்தம் புதிதாக இருக்க வேண்டும்.

சுதந்திர நாடுகளின் பொதுநல அமைப்பில் அங்கம் வகிக்கும் நாடுகளில் உள்ள தொழிற்சாலையில் இருந்து அவை பறந்து வரும் நிலையில் எமக்கு வழங்கப்படவேண்டும்."

— இவ்வாறு அந்த அறிவித்தலில் கூறப்பட்டுள்ளது. கேள்விப்பத்திர முடிவு திகதி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஆள்பலம் போதாததால் நவீன ஹெலி தேவை

### விமானப்படை தளபதி கூறுகிறார்

கொழும்பு, ஒக். 27

"யுத்தத்தில் வெற்றியீட்டுவதற்கு இரண்டு வழிகள் உள்ளன. ஒன்று பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு போதுமான துருப்புக்களை அனுப்பி வைக்கவேண்டும்.

மற்றது மட்டுப்படுத்தப்பட்ட ஆளணி படையினரை நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் அனுப்பி வைக்க வேண்டும்.

ஹெலிகொப்டர்களும் வேறு இயந்திராதி வகைகளும் தேவைப்படுகின்றன"

எம் ஐ — 17 I V ரக ரஷ்ய

(5 ஆம் பக்கம் பார்க்க)

தங்கையே!
வீரத்தில்......
ஆணுக்கும் பெண்ணுக்கும்
அளவுகோலில் மாற்றமில்லை
நீ நிமிர்ந்தால்
நிலம் உனது காலடியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஸ்ரீராம ஜெயம்

## லக்ஷ்மி நாராயண் வீடியோ

எமது நேற்றைய வெளியீடுகள்

- ★ ஐ லவ் இந்தியா
- ★ வீரமுழக்கம்
- ★ கறுப்பு வெள்ளை
- ★ கேப்டன் தேவாரம்
- ★ தூள் பறக்குது

தரமான முறையில் ஒலிப்பதிவு செய்து கொடுக்கப்படும்

இல: 100, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (6704)


## திறப்பு விழா

யாழ்ப்பாணம், ஒக். 27

மாநகரசபையாரால் யாழ் பஸ் நிலையத்தில் புதிதாக அமைக்கப்பட்ட பொது வசதிக் கட்டடத் தொகுதி இன்று காலை 8 30 மணிக்கு பொதுமக்களின் பாவனைக்காகத் திறந்து வைக்கப்படும்.

மலசலகூடப் பாவனைக்கு 1 ரூபாவும், 5 நிமிடங்களுக்கு மேற்படாத குளியலறைப் பாவனைக்கு 5 ரூபாவும், 6 மணித்தியாலங்களுக்கு மேற்படாத பூட்டும் பெட்டகப் பாவனைக்கு 2 ரூபாவும் கட்டணங்களாக அறவிடப்படும். (த)


## அகண்ட நாம பஜனை

சுன்னாகம் ஸ்ரீ சந்திரசேகர விநாயக தேவஸ்தான மகா கும்பாபிஷேக சிறப்பு நிகழ்ச்சியாக இன்று புதன்கிழமை 7.30 மணிக்கு தேவஸ்தான மண்டபத்தில் அகண்ட நாம பஜனை நடைபெறும். சுன்னாகம் பகவான் ஸ்ரீசத்யசாயி பாபா பஜனை நிலைய ஆதரவில் நடைபெறும் மேற்படி பஜனை திருவாசகம் வே. சிவஞானம் அவர்களால் பக்கவாத்திய இசையுடன் ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து உள்நெக்கு என்புருகப் பாடும் அன்பர்களால் பாடப்படும். இதில் கலந்து பக்திப் பரவசமாகி விநாயகப் பெருமானின் திருவருள் பெறுமாறு அனைவரையும் அழைக்கின்றோம்.

சுன்னாகம் சாயி பஜனை நிலையம்

5, மயிலணி வீதி,
சுன்னாகம். (6708)



# CIMA Stage - I
## MAY — 1994

| | | |
|---|---|---|
| Quantitative Methods | — | J. Sathiadas |
| Economics | — | S. Elampoornan |
| Accounting | — | S. P. Sivapathasundaram |
| Business Law | — | T. M. Kesavan |

Course Fees; 2,250/-
Payable in Installments

புதிதாகச் சேரும் மாணவர்கள் புரிந்து கொள்ளக் கூடிய விதத்தில் விரிவுரைகள் நடைபெறும்.

உறுதியான கல்வியைப் பெற

**SCHOOL OF BUSINESS ADMINISTRATION**

16, 3rd CROSS STREET, JAFFNA. (C 6278)



## விலங்கியல்

R. ஈஸ்வரதாசன்
B. Sc Dip In - Ed

பிரத்தியேக வகுப்பு

ஆரம்பம்:- 28—10—93
வியாழன்

[திங் - செவ் - வியாழன் - வெள்ளி வகுப்புக்கள்]

**95 A/L**
புதிய பிரிவு

**94/AL**
Theory & Revision

இல. 88 குமாரசாமி வீதி, சுந்தரமடம், யாழ்ப்பாணம். (9/6282)



## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
## கணக்கியல் ஆசிரியர்

க. பொ. த. [உ. த] வகுப்புகளில் கணக்கியல் / வர்த்தகம் பாடங்களைக் கற்பிப்பதற்கு தகுதியான ஆண் ஆசிரியர்கள் உடன் அதிபருக்கு விண்ணப்பிக்கவும்.

பழைய மாணவர் சங்கம்
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

(9-6281)



## பகுதி நேர விரிவுரையாளர்கள்
## கல்வியாண்டு - 1994

தொழில்நுட்பக்கல்லூரி, யாழ்ப்பாணம்.


1993 - 10 - 01ஆம் திகதிய அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதிற்கிணங்க இக் கல்லூரியில் 1994ஆம் கல்வியாண்டிற்குப் பகுதிநேர விரிவுரையாளர்கள் தேவைப்படும் பாடவிபரம், மாதிரி விண்ணப்பப் படிவம் என்பன இக்கல்லூரியின் விளம்பரப்பலகையில் உள்ளன. தகுதியானவர்கள் மாதிரிப் படிவத்திற்கிணங்க விண்ணப்பங்களை அதிபர், தொழில்நுட்பக் கல்லூரி, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம், என்ற முகவரிக்கு 1993-11-10ஆம் திகதி அல்லது முன்னர் கிடைக்கத்தக்கதாக பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கவும்.

நேரடியாக விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

க. ஜெயரத்தினம்,
அதிபர்.

தொழில்நுட்பக் கல்லூரி,
பிறவுண்வீதி, யாழ்ப்பாணம்,
1993 - 10 - 26 (9-6280)


# 6ஆம் ஆண்டு
# கண்ணீர் அஞ்சலி



## அமரர் த. தருமலிங்கம்

(யா/கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலை, ஓய்வுபெற்ற அதிபர்)

தோற்றம்:
22 — 05 — 1926

அநியாய அழிவு:
27 — 10 — 1987

" அன்புருவே அமுதமே எம் அழகின் ஒளிவிளக்கே!
ஆண்மையின் சிகரமே அறிவின் ஆழ்கடலே
சிந்தனையின் சிற்பியே சித்தாமணியே ஐயா!
ஆண்டு ஆறு ஆகிடினும் ஆறாதையா நும்கவலை
ஆறாகக் கண்ணீர் அலைமோதுதையா அகமெலாம்
நீங்காத நினைவலைகள் நீறாக்குதையா நெஞ்சமதை
வேகுதே நெஞ்சமையா வெந்து பொசுங்குதே
கண்ணை இமைகாப்பதுபோல் காத்திரே காலமெலாம்
அமுதமொழி பேசியென்ன அன்போடணைப்பீரே
முகைச் சிரிப்பாலே முகவொளியை ஆக்குவீரே
பெற்ற மகனுக்கோர் பெருமிதமாயினீரே
ஆசை மனைவிக்கோர் அருமை மாயினீரே!
உற்றார் உறவினர்க்கு உறுதுணையாயினீரே
நல்லாசிரியர்க்கு ஓர் நல் அதிபராய் இருந்தீரே
கலையடைந்தோர்க்கு உயர்பதவி வழங்குவித்தீர்
ஞானபண்டிதராலய ஞானமெலாம் மிளிர வைத்தீர்
"குட்ஷெட்" மருந்தகத்தை கொக்குவிலில் அமைத்தீரே
அன்னைப்பசி போக்க அவனியில் வந்தீரே
அன்னைப்பசி போக்கவில்லை அம்தானும் செல்லவில்லை
சந்திரியின் கண்வலையில் அனைமாய்ச் சிக்கினீரே!
விண்ணவரும் நல்லிருந்தென்று விரும்பியழைத்தனரோ!
தனிமைதனை எமக்களித்து தாரணியை நீத்ததென்ன
உன் கண்ணில் நீர் வடிந்தால் என் கண்ணில் உதிரமென்பீர்
என் கண்ணில் நீர் வடிய ஏன் சென்று மாண்டீரையா!
காலதேவனே வளமைச் சொல்லும் எமக்கென்று
கவிதைதனை வடிக்கின்றான் கண்ணனும் கண்ணீரால்
சேவைக்கே பிறந்தீர் சேவைதனை முடித்துவிட்டீர்
இறைவன் அரவணைப்பில் இன்பமுடனே இருக்கவென்று
இறைவனின் அருளை இதமுடனே வேண்டி நிதம்
சாந்தியடைக வென்று சந்ததமும் வேண்டுகிறோம் கண்ணீரால்.

தங்கள் பிரிவால் வாடி வதங்கும்!
ஆருயிர் அன்பு மனைவி: திருமதி க. தருமலிங்கம்,
மகன், மருமகள், பேரர், உற்றார், உறவினர்.

தருமபதி,
கே. கே. எஸ். றோட்,
கொக்குவில்.

# கண்ணீர் அஞ்சலி

திருமதி
குகானந்தநாயகி அப்புத்துரையின்
(ஆரம்ப பிரிவு தலைவர், இராமநாதன் கல்லூரி)

அன்புக் கணவரான

## செல்லையா அப்புத்துரை

(ஓய்வுபெற்ற உப அதிபர்,
உடுவில் மான்ஸ் மகாவித்தியாலயம்)

அவர்களின் மறைவிற்கு எமது கண்ணீர் அஞ்சலியை செலுத்துகிறோம்.

அதிபர், ஆசிரியர்,
மாணவர்கள், பழைய மாணவர்கள்
யா/இராமநாதன் கல்லூரி.

(9/2058)

# ஈராண்டு நினைவஞ்சலி



| தாயின் மடியில் | இறைவன் அடியில் |
|---|---|
| 09 — 02 — 1972 | 20 — 10 — 1991 |

செல்வன்

## நாராயணமூர்த்தி முகுந்தன்

(பழைய மாணவன், யாழ்ப்பாணக் கல்லூரி வட்டுக்கோட்டை Royal Institute, Colombo)

திதி: 27 — 10 — 1993

அன்பினால் எம்மை எல்லாம் அரவணைத்தீரே!
இன்று நாம் உம்மை இழந்து வாதிக்கின்றோம்
உமது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்;

பெற்றோர், தங்கை,
உற்றார், உறவினர்கள், நண்பர்கள்.

பொன்னர் வளவு,
தொல்புரம் மேற்கு,
சுழிபுரம். (6608)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலை. அனுமதியில் ஜனாதிபதி தவறாக வழி நடத்தப்பட்டார்

## பேராசிரியர் அலுவிஹார குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக். 27

பல்கலைக்கழக அனுமதி மற்றும் வட கொழும்பு மருத்துவக் கல்லூரி ஆகிய விடயங்களில் ஜனாதிபதி தவறாக வழி நடத்தப்பட்டுள்ளார் என நான் நம்புகிறேன்; பதவி விலக்கப்பட்ட பல்கலைக்கழக மான்ய ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் அர்ஜுன் அலுவிஹார ஜனாதிபதிக்கு எழுதிய நான்கு பக்கக் கடிதம் ஒன்றில் முன்கண்டவாறு கூறியுள்ளார்.

"எனது கடமையை சட்டபூர்வமாகச் செய்ததற்காகவா நான் பழிவாங்கப்பட்டேன்?" என்றும் அவர் ஜனாதிபதியைக் கேட்டிருக்கிறார்.

"நான் பதவி விலக்கப்பட்ட விதம் ஏனைய போர் மத்தியில் அச்சமின்மை மற்றும் விசுவாசம் ஆகிய உணர்வுகளை வளர்த்து பராமரிக்க உதவாது" என்றும் பேராசிரியர் தெரிவித்திருக்கிறார். (இ-எ)

## கொழும்பில் தமிழர் கைது:

# ஜனாதிபதியைச் சந்தித்து தொண்டமான் முறையிடுவார்

கொழும்பு, ஒக். 27

கொழும்பில் உள்ள தமிழர்களைப் பொலீஸார் கண்டபடி கைது செய்துவரும் விவகாரம் குறித்து ஜனாதிபதி விஜேதுங்காவுடன் அமைச்சர் தொண்டமான் பேச்சு நடத்த இருக்கிறார்.

ஜனாதிபதிக்கு எழுதிய கடிதம் ஒன்றில் —

இது பற்றி சந்திப்பதற்கு அவசரமாக திகதி ஒன்றை ஒதுக்கும்படி தொண்டமான் கேட்டுள்ளார்.

"தமிழர்களை கைது செய்யும் விவகாரம் குறித்து அமைச்சரவைக் கூட்டத்திலும் நான் எடுத்துச் சொன்னேன். எனினும் கைதுகள் தொடர்கின்றன" — என்றும் அவர் தமது கடிதத்தில் கூறியிருக்கிறார்.

"இப்போதும் கூட தினமும் தமிழர் கைது செய்யப்படுவதாக எனக்கு தகவல்கள் கிடைத்த வண்ணம் உள்ளன.

"கைது செய்யப்படுபவர்கள் நேராக புறக்கோட்டை பொலீஸ் நிலையத்துக்கு கொண்டு செல்லப்பட்டு அங்குள்ள கூண்டுகளில் அடைக்கப்படுவதாக எனக்குத் தெரிவிக்கப்பட்டது.

ஒரு கூண்டில் ஒரு தடவையில் 200 பேர் வரையில் அடைக்கப்படுகின்றனர். ஒரு கூண்டின் அளவு 30 அடி நீளமும் 15 அடி அகலமும் கொண்டது.

"கைதாகும் எவரும் விசாரணை முடியும் வரை குற்றவாளியாக நடத்தப்படக்கூடாது என்பதையும் — குற்றவாளியாகக் காணப்படும் வரை அவர் கௌரவமாகவும் மனிதாபிமானமாகவும் நடத்தப்பட வேண்டும் என்பதையும் நீங்கள் ஏற்பீர்கள் என்று நம்புகின்றேன்.

"கைது செய்யப்படுபவர்களை அடைத்து வைக்க இடவசதி கொண்ட இடம் கிடைக்காதபட்சத்தில், விசாரணை முடியும்வரையாவது அவர்களை இடவசதியான கட்டடம் ஒன்றில் அடைத்து வைக்க ஒழுங்குகளைச் செய்ய வேண்டும். அவர்கள் தங்கள் உறவினர்களுடன் தொடர்பு கொள்ள சந்தர்ப்பம் அளிக்கப்பட வேண்டும்.

இப்பிரச்சினைக்கு விரைவான தீர்வு காணப்பட வேண்டியது அவசியமானது"

இப்படி திரு தொண்டமான் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார். (இ-எ)

## ஓவிய சிற்ப காட்சி

1993ஆம் ஆண்டிற்கான யாழ் மாவட்ட பாடசாலை மாணவர்களின் ஓவிய.சிற்பக் காட்சி நாளை மறுதினம் 29ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10மணியளவில் யாழ் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய கலைக்கூடத்தில்யாழ். பிரதேச கல்விப் பணிப்பாளர் இ. சுந்தரலிங்கத்தினால் திறந்து வைக்கப்படும்.

கலைக் கூடம் வெள்ளி,சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் காலை 9 மணி முதல் பிற்பகல் 4மணி வரை காட்சிக்காக திறந்திருக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க-17)

## முகாம் இட மாற்றம்

அராலி மேற்கு வைரவர் கோயிலடியில் அமைந்திருந்த இடம் பெயர்ந்தவர்கள் முகாம் தற்போது துணவி கிராமத்துக்கு மாற்றப்பட்டுள்ளது. (க-161)


# விற்பனைக்கு

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு

கீழ்க்காணும் தரமான உள்ளூர் உற்பத்திப் புடைவைகள் எம்மிடம் விற்பனைக்கு உண்டு

★ வேட்டி ★ துவாய்
★ சால்வை ★ சேலை
★ பெட்சீற் ★ சீற்றின்

வியாபாரிகளுக்கு விஷேட கழிவு உண்டு

— பொதுமுகாமையாளர்

தொடர்பு:

யாழ். மாவட்ட புடைவை நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்,
இல. 303, பலாலி வீதி (பரமேஸ்வரா சந்தி),
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
26 - 10 - 1993

(கி-6177)


# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு: 04 — 11 — 1917



உதிர்வு: 27 — 09 — 1993

## அமரர் தம்பையா சதாசிவம்

(முன்னாள் பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி அதிபர்)

பண்பின் இருப்பிடமாய், பாசத்தின் சிகரமாய், அன்பின் திருவுருவாய், எம் குடும்பத்தின் ஒளிவிளக்காய்த் திகழ்ந்து எங்கள் அனைவருக்கும் வழிகாட்டிய அன்புத் தெய்வமே! நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்தாலும் உங்கள் நினைவலைகள் என்றும் எங்கள் இதயத்தில் அணையாத தீபமாய்ப் பிரகாசித்துக் கொண்டிருக்கும். ஆவி பிரியும் நிலையிலும் அம்பலக் கூத்தனை அழைத்தீர்கள். நீங்கள் அவன் பாதம் அடையவும் உங்கள் ஆத்மா சாந்தியடையவும் இறையருள் வேண்டுகின்றோம்.

இன்று 27 - 10 - 1993 இல் நிகழவிருக்கும் சபிண்டீகரண வைபவத்திலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் பணிவன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் வாடும்:
அன்பு மனைவி, மகள்.

இல. 24,
புதிகள் குளம் வீதி,
கொழும்புத்துறை.

(27794)


தரமான மாட்டிறைச்சி வற்றல் கிடைக்கவில்லை என்று கவலையா?

★ கவலையை விடுங்கள்

வற்றாத வளம் சூழ்ந்த வன்னியிலே இருந்து வந்திருக்கும் தரமான மாட்டிறைச்சி வற்றலை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

மலிவான விலையினிலே சுவையான இறைச்சி வற்றல்

தரமான மாட்டிறைச்சி வற்றல கிலோ 160/-மட்டுமே

நீங்கள் தவறாது நாடவேண்டிய இடம்;

"உதயம் பல்பொருள் அங்காடி"

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

(கி-6179)


# வண. பிதா பீற்றர் பியன்வெனு நோஜ



இன்று 1993 ஆம் ஆண்டு ஐப்பசித் திங்கள் 27ஆம் நாள்; திருக்குடும்பச் சபைத்துறவிகளின் வரலாற்றிலே ஒரு மகத்தான நாள். உலகெங்கும் பரவி, எமது ஈழவளநாட்டின் எல்லா மாகாணங்களிலும், சிறப்பாக யாழ் மறை மாவட்டத் திருச்சபையிலும் கடந்த 178 ஆண்டுகளாக அளப்பரிய சேவையாற்றிவரும் திருக்குடும்பச் சபைச் சகோதரிகளை எம்மிடையே அறியாதார் இலர் என்றே கூறலாம்.

இவர்கள் தமது சபை நிறுவனர் வண. பீ. பியன்வெனு நோஜ அடிகளாரின் 200 ஆவது பிறந்த நாளை இன்று நன்றியுடன் நினைவு கூர்கிறார்கள். இவர் 1793 ஆம் ஆண்டு ஐப்பசித் திங்கள் 27 ஆம் நாள், பிரான்ஸ் நாட்டின் தென்மேற்குக் கரையில் உள்ள பிரதான துறைமுகப் பட்டினமாகிய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த போர்டோவிலே பிறந்தார். இளமையின் பொலிவால் ஏறுநடை போட்ட தம் மழலை மைந்தனைக் கண்டு உள்ளம் பூரிப்படைந்தனர் அவன் பெற்றோரும், சகோதரரும். அளவில்லா அன்புடனும், பாசத்துடனும் அவன் வளர்ச்சியில் அக்கறை கொண்டனர். அதிசயிக்கத்தக்க பல அபூர்வ திறமைகள் அவனது ஆளுமைக்கு மெருகூட்டின.

18 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலே, ஐரோப்பாக் கண்டத்தை அதிர வைத்த பிரான்சிய அரசியற் புரட்சியின் விளைவாக அந்நாட்டின் கத்தோலிக்க திருச்சபை அப்போது, பல சோதனைகளுக்கும் வேதனைகளுக்கும் உள்ளாயிற்று. தேவாலயங்கள், பாடசாலைகள், குருமடங்கள் யாவும் மூடப்பட்டன. குருக்கள் அனைவரும் ஒளித்து மறைந்து வாழவோ அன்றேல் நாட்டை விட்டுத் தப்பி ஓடவோ நிர்ப்பந்திக்கப்பட்டனர். கண்டுபிடிக்கப்பட்டால் கொலை வாளுக்குப் பலியாயினர். இதன் பின்னணியில் இடம்பெற்ற பயங்கர ஆட்சிக் காலத்தில் பிறந்தவர்தான் நம் தந்தை பியன்வெனு. இயல்பிலேயே தன்னம்பிக்கை உடையவராக, எதுவரினும் கலங்கா உறுதியுடன் எதிர் நீச்சல் போடும் மாவீரனாக, தலைசிறந்த ஒரு தலைவனாக வளர்ந்த இவரது ஆளுமையால் கவரப்பட்டோர் பலர். இதன் பலனாகப் பிற்காலத்தில் பொறுப்புள்ள பல பதவிகள் இவரைத் தேடிவந்தன. ஒரு காலகட்டத்தில், அரச படையில் ஒரு இராணுவத் தளபதியாகவும், பின்னர் சில காலம் கைதேர்ந்த வழக்கறிஞராகவும் பணி புரிந்தார். எனினும் இவை ஒன்றிலும் அவர் மனம் நிலை கொள்ளவில்லை. அனைத்தையும் உதறித்தள்ளி விட்டு வீடு நோக்கி விரைந்தவர், எதிலும் ஈடுபாடற்றவராக, இன்பநாட்டத்திலும் களியாட்டக் கேளிக்கைகளிலும் நாட்டமில்லாதவராகக் காணப்பட்டார். ஆனால், இவற்றின் மத்தியிலும் ஏழைகள், அநாதைகள், வலுவற்றோர், ஒடுக்கப்பட்டோர், நோயாளர், மனமுடைந்தோர், அகதிகள், முதியோர், கைம்பெண்கள் இவர்களின் நலனுக்காகத் தன்னை முழுமூச்சாக அர்ப்பணித்தார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

ஒரு நாள் அந்தி மாலைப்பொழுதில் ஆலயம் சென்றவர், ஏதோ தடுக்க முடியாத ஓர் உந்து சக்தியால் ஆட்கொள்ளப்பட்டவராக, அங்கிருந்த குருவானவரை அணுகினார். இளைஞனின் அந்தரங்க எண்ணங்களையும், ஆவல்களையும் செவிமடுத்த குருவர், இளைஞன் பியன்வெனுவை, இறைவன் தம்பணிக்கு அழைப்பதாக அடையாளம் கண்டதில் வியப்பில்லை. "எவ்வழிகள் இறைவனின் வழிகள் அல்லவே." இறையருள் பெற்ற நம் இளைஞரின் வாழ்வு, அன்றிலிருந்து ஒரு புதிய பாதைக்குத் திசை திருப்பப்பட்டது. மைந்தனின் மனமாற்றத்தைக் கண்ணுற்ற பெற்றோர், சகோதர-சகோதரிகள், நண்பர்கள் அனைவரும் மட்டற்ற மகிழ்ச்சியடைந்தனர். குருமட மாணவனாகத் தன்னை இணைத்துக் கொண்ட பியன்வெனு சில வருடங்களில் ஆழ்ந்த இறையனுபவம் பெற்று, 1819 ஆம் ஆண்டு ஆனித் திங்கள் ஐந்தாம் நாள திரித்துவ ஞாயிறன்று இறைவனின் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். "மக்கள் சேவையே மகேசன் சேவை" என்று, ஆன்மதாகம் கொண்டவராக, ஒப்புரவின் அப்பனாக இறைமகிமைக்காக ஓயாது உழைத்தார். இந்தக் குருத்துவ அர்ப்பணத்தின் முதற்கனியாக 1820 ஆம் ஆண்டு சபையின் முதற்குடும்பம் உருவானது.

போர்க்காலப் பின்னணியில், புரட்சிக்கால வரலாற்றின் மத்தியில் பிளவு பட்டுச் சிதறிக்கிடந்த சமுதாயத்தின் குடும்பங்களை ஒன்றிணைக்கும் பணியில், இச்சபை அங்கத்தவர்கள் தம்மை முற்றாகக் கையளித்தனர். நசரேத்திரன் திருக்குடும்பத்தின் பாதுகாவலின் கீழ் வேரூன்றி வளர்ந்த இச்சபையானது, தன்னைப் புதுப்பித்து, தன் பாரிய குடும்பத்தின் பொது நிலையினரையும் வரவேற்று, இறையரசு வளர, காலத்தேவைகேற்ப சிறப்பான, தொடர்ச்சியான தொண்டாற்றி வருகின்றது.

வாழ்க! அதன் நிறுவனர்,
வளர்க அதன் பணிகள்!

திருமதி யூலியானா பிறின்ஸ்
(தி கு. பொதுநிலையினர்)

(27786)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள டயின் நீட்ஸ் ஹார்மோனியம் கடனடியாக விற்பனைக்குண்டு. தொடர்பு: 11, அரசடி ஒழுங்கை, ஐயனார் கோவிலடி, வண்ணார் பண்ணை. (27785)

3½ மாதங்கள் நிரம்பிய நல்லின ஆண் அல்சேஷன், 7 மாதங்கள் நிரம்பிய பெண் அல்சேஷன் நாய்கள் விற்பனைக்குண்டு. தடுப்பூசிகளாவும் ஏற்றப்பட்டுள்ளன. தொடர்பு: இல. 698/15, சபாபதி வீதி, தலையாழி (வைரவர் கோவிலடி), யாழ்ப்பாணம். (27793)

### புலமைப் பரிசில் வகுப்பு

புலமைப் பரிசில் வகுப்பு ஆண்டு 5 (1994) 28 10-93 பொ. சுப்பிரமணியம் 164, கோயில் வீதி, நல்லூர். (27787)

### வினாத்தாள் ஆண்டு - 4

ஆண்டு 4 (புலமைப் பரிசில் 1994) மாதிரி வினாத்தாள் பதின்மூன்றாவது பரீட்சை 23-10 93 சனி நடைபெற்றது. அவ்வினாத்தாள்களைப் பெறாத நிறுவனங்களும், பாடசாலைகளும், மாணவர்களும் பெற்றுக் கொள்ளலாம். புதிய கல்வி நிலையம், இல. 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (27783)

### திருத்தவேலைகளுக்கு

உங்கள் கடிகாரங்கள், றேடியோக்கள் அனைத்தும் நிபுணர்களால் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். டிக்கா றேடியோ அன்ட் வோச் வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி, (வானவில் அருகில்) யாழ்ப்பாணம். கிளை: கண்டி வீதி, சாவகச்சேரி. (இ-6176)

## பரீட்சை

அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கம் நடத்தும் சைவப் புலவர் பரீட்சை எதிர்வரும் டிசம்பர் 30 ஆம், 31ஆம் திகதிகளில் நடைபெறும். விண்ணப்ப இறுதி நாள் இம்மாதம் 31 ஆம் திகதி என அறிவிக்கப்பட்டுள்ளது.

## BECON

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**A/L - 94**

புதிய வினா : விடை வகுப்புகள்

ஆரம்பம்:
31 — 10 — 1993
ஞாயிறு

பௌதிகவியல்-
திரு. வர்ணம்
12 00 — 1-00

இரசாயனவியல்-
திரு தில்லைநாதன்
1.00 — 2.00

★ அனுமதிகளை முன் கூட்டியே பெற்றுக் கொள்ளவும்.

(இ-6440)

## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
(O/L வகுப்புக்களுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

**ஆண்டு - 10 (O/L - 94)**
**ஆண்டு - 9 (O/L - 95)**

இறுதித் தவணைப் பரீட்சைக்கான மீட்டல் வினா - விடை வகுப்புகள்

திறமையால் பிரபல்யமான திறமைமிக்க யாழ் முன்னணி ஆசிரியர் குழு!

| | |
|---|---|
| விஞ்ஞானம்: | திரு. J. R. ஸ்ரீ |
| கணிதம்: | திரு. ஜெகன் |
| சமூகக்கல்வி: | திரு. கோபி |
| ஆங்கிலம்: | திரு. விஸ்வநாதன் |
| தமிழ்: | திரு. சிவா, திருப்பதி |
| வர்த்தகம்: | திரு கருணாகரன் |
| சமயம்: | திரு. சங்கர், கெங்கா |

ஆரம்பம்:
28 — 10 — 1993 (வியாழன்) மாலை 3 மணி

**O/L 93 க்குரிய PAPER CLASS**

மொத்தம் 9 பிரிவுகளில் நடைபெறுகின்றது
புதிய அனுமதிகள் இல்லை

(சி/6434)

கந்தர்மடம்

## செல்வ நாகபூஷணி அம்பாள் ஆலயம்

## அறிவித்தல்

மேற்படி ஆலயத்தின் பொருள் நிதி உதவியோ, பொருள் உதவியோ சேகரிக்க ஏற்கனவே இருந்தவர்களுக்கோ புதிதாக எவருக்குமோ அனுமதி அளிக்கவில்லை. இவ் உதவிகளை செய்ய விரும்புவோர் ஆலய நிர்வாகியுடன் நேரடியாகத் தொடர்புகொள்ளவும்.

ஆலயத் திருப்பணி வேலைகள் இருப்பதால் அம்பாள் அடியார்களின் உதவியை தந்துதவும்படி கேட்டுக் கொள்கிறேன்.

இப்படிக்கு
செ. குகநாதன்,
ஆலய நிர்வாகி.

108, அரசடி வீதி,
கந்தர்மடம்.

(6558)

## வாழ்த்துகின்றோம்

நவயுக சிற்பி நம் சபை நிறுவுனர்

**தந்தை பீற்றர் பியன்வெனு நோஜ**

அவர்களின்
200 ஆவது பிறந்த நன்னாளிலே
யாழ். திருக்குடும்ப கன்னியர் சபையினருக்கு
நல வாழ்த்து கூறுகின்றார்கள்
பாஷையூர் திருக்குடும்பசபை பொது நிலையினர்

திருமதி யூ பிறின்ஸ்

(6560)

## கலை, வர்த்தகக் கல்லூரி

C. C. A.
வெலிங்டன் சந்திக்கருகில்,
யாழ்ப்பாணம்.

**A/L 94 DAY CLASSES**

**ஆரம்பம்: 28 - 10 - 1993**

பிரிவு - III

எமது ஆசிரியர் குழு!

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | திரு உதயன் |
| கணக்கியல் | — | திரு. ஸ்ரீ |
| வர்த்தகம் | — | திரு இரட்ணம் |
| அளவையியல் | — | திரு. சயந்தன் |

நேர அட்டவணையை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளவும்.

குறிப்பு:
பிரிவு-I, II க்கு பின்வரும் நேர அட்டவணைப்படி வகுப்புகள் நடைபெறுகின்றன திங்கள், வெள்ளி பாடத்திட்டமும் செவ்வாய், வியாழன் வினா-விடை (Paper Class) வகுப்பும் நடைபெறுகிறது.

நேர அட்டவணை

| பாடம் | திங். | செவ். | வியா. | வெள். |
|---|---|---|---|---|
| பொருளியல் | | | | |
| பிரிவு — I | 12— 2 | 8 — 10 | 8 — 10 | 12 — 2 |
| — II | 10 — 12 | 10 — 12 | 10 — 12 | 10 — 12 |
| கணக்கியல் | | | | |
| பிரிவு — I | 10 — 12 | 10 — 12 | 10 — 12 | 10 — 12 |
| — II | 12 — 2 | 8 — 10 | 8 — 10 | 12 — 2 |
| வர்த்தகம் | 3 — 5 | — | — | 3 — 5 |
| அளவையியல் | 5 — 6 | — | — | 5 — 6 |

(சி-6489)

வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, நீர்வேலி

# கேள்வி அறிவித்தல் - 1994

வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட கீழ்க்காணும் சந்தைகள், இறைச்சிக் கடைகள், கடைகள் ஆகியவற்றை 1994ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 01ஆம் திகதி தொடக்கம் 1994ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ஆம் திகதி வரை குத்தகைக்கு விற்பனை செய்வதற்கு அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் 10 11-1993ஆம் திகதி நண்பகல் 12-00மணிவரை வலிகாமம் கிழக்குப் பிரதேச சபை, தலைமை அலுவலகத்தில் ஏற்றுக் கொள்ளப்படும். அன்றைய தினம் பிற்பகல் 1-00மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். கேள்விப் பத்திரங்கள் யாவும் அப்பகுதி பிரதேச சபை உப அலுவலகங்களின் பொறுப்பதிகாரிகளிடமிருந்து கேள்வி வைப்புப் பணமும், கேள்விப் பத்திரப் பணமும் செலுத்துவதன் பேரில் 09-11-1993ஆம் திகதி நண்பகல் 12-00மணிக்கு வழங்கப்படும். பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப்பத்திரத்தின் மூலப்பிரதியை விசேட ஆணையாளர், வலிகாமம் கிழக்குப் பிரதேசசபை தலைமையலுவலகம், நீர்வேலி என முகவரியிட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது வலிகிழக்கு பிரதேசசபை நீர்வேலி, தலைமை அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். இணைப்பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவியாணையாளர் உள்ளூராட்சி திணைக்களம், யாழ்ப்பாணம் என முகவரியிட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் இன்ன குத்தகைக்கான கேள்வி எனக் குறிப்பிடுதல் வேண்டும். கேள்விப் பத்திரம் பெற விரும்புவோர் அடையாள அட்டை காண்பித்தல் வேண்டும்.

தேர்வு செய்யப்படும் கேள்விதாரர் கேள்வி அறிவித்தல் நிபந்தனைகளுக்கமைய குத்தகையை எடுத்து நடத்துதல் வேண்டும். நிபந்தனைகளில் ஏதாவது ஒன்றை மீறுமிடத்து எதுவித நட்டஈடுமின்றி குத்தகை உரிமையை இரத்துச் செய்யும் அதிகாரம் விசேட ஆணையாளருக்கு உண்டு. வேறு விபரங்கள் அறிய விரும்பின் அந்தப் பிரதேச சபை உப அலுவலகங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

வலி கிழக்குப் பிரதேச சபை,
தலைமை அலுவலகம், நீர்வேலி.
25 - 10 - 1993

முத்துசாமி இராசரத்தினம்,
விசேட ஆணையாளர்
வலி. கிழக்குப் பிரதேச சபை,
நீர்வேலி.

| உப அலுவலகம் | கேள்விப் பத்திரப் பணம் | கேள்வி வைப்புப் பணம் | மதிப்பீட்டுத் தொகை |
|---|---|---|---|
| **1. உரும்பராய், ஊரெழு** | | | |
| 1. உரும்பராய் ஆட்டிறைச்சிக் கடை | 150 00 | 500 00 | 20550.00 |
| 2. உரும்பராய் மாட்டிறைச்சிக் கடை | 150 00 | 500.00 | 50000.00 |
| 3. ஊரெழு மாட்டிறைச்சிக் கடை | 100.00 | 150.00 | 15500.00 |
| 4. உரும்பராய் மத்திய சந்தை | 150 00 | 500.00 | 9515.00 |
| 5. ஊரெழு சந்தை | 100.00 | 100 00 | 650 00 |
| 6. ஊரெழு ஆட்டிறைச்சிக் கடை | 100.00 | 100 00 | 17250.00 |
| **2. நீர்வேலி** | | | |
| 1. பொதுச் சந்தை (மரக்கறி), நீர்வேலி வடக்கு | 50 00 | 100.00 | 15000.00 |
| 2. பொதுச் சந்தை (மீன்), நீர்வேலி வடக்கு | 50 00 | 150.00 | 2100.00 |
| 3. நீர்வேலி மத்திய சந்தை | 50 00 | 100.00 | 625 00 |
| 4. நீர்வேலி மாட்டிறைச்சிக் கடை | 50 00 | 150 00 | 23000.00 |
| 5. நீர்வேலி ஆட்டிறைச்சிக் கடை | 50.00 | 100 00 | 1875 00 |
| 6. நீர்வேலி உப அலுவலக வளவு | 25 00 | — | 225.00 |
| **3. அச்சுவேலி** | | | |
| 1. அச்சுவேலி பொதுச் சந்தை | 150.00 | 1000 00 | 83000.00 |
| 2. அச்சுவேலி மாட்டிறைச்சிக் கடை | 150.00 | 1000 00 | 50000.00 |
| 3. அச்சுவேலி ஆட்டிறைச்சிக் கடை | 150.00 | 500 00 | 15000.00 |
| 4. வளலாய், தம்பாலை பொதுச் சந்தை | 50.00 | 50 00 | 1090.00 |
| **4. புத்தூர்** | | | |
| 1. புத்தூர் மத்திய சந்தை | 100.00 | 100.00 | 9075.00 |
| 2. புத்தூர் மத்திய சந்தை மாட்டிறைச்சிக் கடை | 150.00 | 250.00 | 41000.00 |
| 3. ஆவரங்கால் மரக்கறிச் சந்தை | 50 00 | 100.00 | 550.00 |
| 4. ஆவரங்கால் மீன் சந்தை | 50.00 | 100.00 | 2200 00 |
| 5. வாதரவத்தை மாட்டிறைச்சிக் கடை | 100 00 | 150.00 | 5110.00 |
| 6. ஆவரங்கால் சந்தை கடை இல. 1 | 50 00 | 150.00 | 3000.00 |
| 7. ஆவரங்கால் சந்தை கடை இல. 2 | 50.00 | 150.00 | 3000.00 |
| 8. ஆவரங்கால் சந்தை கடை இல. 3 | 50.00 | 150.00 | 3000.00 |
| 9. புத்தூர் சுவீஸ் கடை | 50.00 | 150.00 | 600.00 |
| **5. கோப்பாய்** | | | |
| 1. இருபாலை மீன் சந்தை | 50 00 | 100.00 | 550.00 |
| 2. இருபாலை சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 100.00 | 250.00 | 5110.00 |
| 3. இருபாலை சந்தை மாட்டிறைச்சிக் கடை | 100 00 | 250.00 | 35000.00 |
| 4. கோப்பாய் வடக்கு மாட்டிறைச்சிக் கடை | 100.00 | 150.00 | 9000 00 |
| 5. கோப்பாய் வடக்கு ஆட்டிறைச்சிக் கடை | 100.00 | 150.00 | 5400.00 |

(இ-6875)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

# அரசு வைத்துள்ள சரியான குறி!

வடக்கு-கிழக்கு இணைப்புக் குறித்து சர்வசன வாக்கெடுப்பு நடத்துவது. அதன் பின்னர் தமிழ்ப் பகுதிகளில் மாகாணசபைத் தேர்தலை நடத்துவது.

இனப்பிரச்சினைக்கு அரசாங்கம் கைவசம் வைத்திருக்கும் தீர்வு இவையே. இவை இரண்டையும் விட வேறு எதனையுமே சிந்திப்பதற்கும் அரசாங்கம் தயாரில்லை தலாத்து ஓயாவில் நடந்த சனிக்கிழமை பேசும்போது ஜனாதிபதி சர்வசன வாக்கெடுப்பு வடக்கு-கிழக்கு மாகாணசபைத் தேர்தல் ஆகிய இரண்டையுமே முதன்மைப்படுத்திக் காட்டினார்.

தமிழர் பிரதேசத்தில் — வடக்கு-கிழக்கில் — இருப்பது பயங்கரவாதப் பிரச்சினையே; இனப்பிரச்சினை இல்லை என்று வலியுறுத்தி வருபவர் விஜேதுங்கா வடக்கு-கிழக்கில் மாகாணசபை நிர்வாகத்தை மீள உண்டாக்கும் தீர்வைவிட வேறு எதுவும் அவரது கையில் புதிதாக இருக்கும் என்று எதிர்பார்க்க முடியாது.

இனப்பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வையே கண்டுவிடக் கூடியது என்று பிரேமதாசா பெரிதுபடுத்திய நாடாளுமன்றத் தெரிவுக்குழுவும், வடக்கு-கிழக்கைப் பிரித்துவிடுவது, அதற்குத் துணைபோகும் விதத்தில் சர்வசன வாக்கெடுப்பை நடத்துவது என்பவற்றையே முதலில் செய்ய வேண்டும் என்று சிபார்சு செய்யவிருக்கிறது.

அதன் பிரகாரம் கிழக்கில் சர்வசன வாக்கெடுப்பை எதிர்வரும் பெப்ரவரி மாதத்தில் நடத்த வேண்டும் என்பதற்காகவே ஜனவரிக்கு முன்னர் அந்தப் பிரதேசத்தைத் துடைத்து விடுவதற்குப் படையினருக்கு ஜனாதிபதி அவகாசம் வழங்கியிருக்கிறார்.

வடக்கு-கிழக்கில் நடக்கும் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவராமல் அங்கு அமைதியான, நேர்த்தியான வாக்களிப்பை நடத்த முடியாது என்பது குறித்து அரசுக்கு அக்கறையில்லை. குழப்பமான சூழ்நிலையில் சர்வசன வாக்கெடுப்பை நடத்தினாலே வடக்கு-கிழக்கைப் பிரிக்க வேண்டும் என்ற இலக்கை அடையக் கூடியதாக வாக்கெடுப்பு முடிவு அமையும் என்று அது கருதுகிறது.

கிழக்கைப் பிரித்துவிட்டால் மேலும் தாராளமாகச் சிங்களவர்களை அங்கு குடியேற்றலாம். தமிழர்களின் இன விகிதாசாரத்தை குறைக்கலாம். அந்த நோக்கத்தை அடைந்தால், வடக்கு-கிழக்குத் தமது தாயகம் என்ற தமிழர்களின் நிலைப்பாட்டைச் செயல் ரீதியாக உடைத்து விடலாம் என்பது அரசின் உள்ளார்ந்த நோக்கம்.

அதனாலேயே யுத்த சூழ்நிலையைப் பயன்படுத்தி கிழக்கில் மட்டும் சர்வசன வாக்கெடுப்பை நடத்தி தமிழர் தாயகத்தைப் பிரித்து விடுவதில் அரசு அவசரம் காட்டுகிறது. கிழக்கில் தேர்தலை அமைதியாகவும் சீராகவும் நடத்தக் கூடிய சூழ்நிலை உருவாகவில்லை என்பதனையும் மறைத்து, சர்வசன வாக்கெடுப்பை நடத்துவது என்று ஒற்றைக் காலில் நிற்கிறது.

அடுத்த வருடம் ஸ்ரீலங்காவில் தேர்தல் வருடம் நாடாளுமன்ற, ஜனாதிபதித் தேர்தல்கள் 1994 பிற்பகுதியில் நடக்க வேண்டும். அதற்கு முன்னர், வருட ஆரம்பத்தில் வடக்கு-கிழக்கைப் பிரித்துவிடுவதற்குச் சாதகமான வகையில் சர்வசன வாக்கெடுப்பை நடத்தினால் இரண்டு தேர்தல்களிலும் சிங்களவர் வாக்குகளுக்கு பஞ்சமிருக்காது!

இதனைச் சரியாகக் குறிபார்த்தே, படையினர் பாதுகாப்பில் சிங்களக் குடியேற்றத்தைத் தாராளமாக நடத்திய நிலையில், தமிழர்களை அவர்களது சொந்தக் கிராமங்களில் இருந்து விரட்டிவிட்ட நிலையில், அமைதியற்ற சூழ்நிலையில் கிழக்கில் சர்வசன வாக்கெடுப்பை பெப்ரவரியில் நடத்துவதற்கு அரசு வரிந்து கட்டி நிற்கிறது!

## இன்று

சித்தா வைத்திய-ஆராய்ச்சி நிலையத்தின் திறப்பு விழா இன்று புதன்கிழமை பிற்பகல் 3-30 மணிக்கு யாழ் நாச்சிமார் கோவிலுக்கு அருகில் நடைபெறும்.

நிகழ்ச்சியில் விடுதலைப் புலிகளின் யாழ் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. சி. இளம்பரிதி முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்வார். யாழ். பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் அ. துரைராசா நிலையத்தைத் திறந்து வைப்பார். (த)

o o o

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்திற்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களை மீளமைப்பு செய்வதற்கும் பதிவு செய்வதற்குமான விசேட கூட்டம் இன்று காலை 10 மணிக்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திரு. கா. சந்திரராஜா தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

அரசாங்கத்தால் கிடைக்கப் பெற்ற விளையாட்டு உபகரணங்களை விநியோகிப்பது குறித்தும் இந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்படும் என அப்பகுதி விளையாட்டு அதிகாரி திரு. பா. சிறுபாகரன் தெரிவித்தார். (உ-10)

o o o

கரவெட்டி கோட்டக் கல்வி அலுவலகம் இராசகிராம வீதியில் இன்று முற்பகல் 11 மணிக்கு திறந்து வைக்கப்படவிருக்கிறது.

கரவெட்டிக் கோட்ட பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. சி. சிவராஜா தலைமையில் நடைபெறும் இந் நிகழ்ச்சியில் முதன்மை விருந்தினராக வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு. ஆர். சுந்தரலிங்கமும் சிறப்பு விருந்தினராக தமிழ்க் கல்விக் கழகப் பொறுப்பாளர் திரு. வெ. இளங்குமரனும் பங்குபற்றுவர்.

## இந்திய மீனவர் 55 பேர் இதுவரை பலி

கொழும்பு, ஒக். 27

1985 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இலங்கைக் கடற் படையினரின் சூட்டுக்கு இந்திய மீனவர்கள் 260 பேர் இலக்காகியுள்ளனர். அவர்களில் 55 பேர் மரணமடைந்துள்ளனர்.

இந்திய அரசு அண்மையில் வெளியிட்ட புள்ளிவிவரத்தில் இது பற்றித் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (உ-9)

## ஆலயங்களில்

கன்னாகம் ஸ்ரீ சந்திரசேகர விநாயகர் கோவில் மகா குமாபிஷேக நிகழ்வில் இன்று காலை 9 மணி முதல் மாலை 8 மணி வரை எண்ணெய்க் காப்பு சாத்தும் வைபவம் இடம் பெறும். இரவு 7.30 மணி முதல் மறு நாள் காலை 5.30 மணி வரை கன்னாகம் பகவான் ஸ்ரீ சத்திய சாயி பஜனை நிலையத்தினரின் அகண்ட நாம பஜனை இடம் பெறும். (த-89)

## 70 பயணிகள் நரேமாவில் வந்து சேர்ந்தனர்

யாழ்ப்பாணம், ஒக். 27

திருமலையில் இருந்து 70 பயணிகள் நேற்று "நரேமா" கப்பல் மூலம் காங்கேசன் துறை வந்து அங்கிருந்து "வாதுவ" கப்பல் மூலம் பருத்தித்துறை வந்தடைந்தனர்.

நரேமா கப்பல் மூலம் திருமலை செல்வதற்காக நேற்று இங்கிருந்து 17 பயணிகள் புறப்பட்டுச் சென்றனர். (உ-5-162)

## ஒய்வூதிய வவுச்சர்கள்

யாழ்ப்பாணம், ஒக். 27

யாழ். மாவட்ட ஓய்வூதியர்களின் ஒக்டோபர் மாத ஓய்வூதிய வவுச்சர்கள் கடந்த செவ்வாய்க்கிழமை யாழ்.செயலகத்தில் இருந்து உரியவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (த-100)

## நாளை

யாழ். இந்து மகளிர் கல்லூரியின் பொன் விழா ஆண்டினை ஒட்டி பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினால் 15 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ள பொன் விழா ஞாபகார்த்த நூல் நிலையக் கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டு விழா நாளை வியாழன் காலை 9.30 மணிக்கு கல்லூரியில் நடைபெறும். (த)

'யாழ்தேவி' நடவடிக்கை

# அரச அதிபர் அறிக்கை கொழும்பில் ஆராய்வு

கொழும்பு, ஒக். 27

யாழ்தேவி இராணுவ நடவடிக்கையால் குடாநாட்டில் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்து யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் ஜனாதிபதிக்குச் சமர்ப்பித்த அறிக்கை ஒன்று கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பில் நடந்த உயர்மட்ட கூட்டம் ஒன்றில் ஆராயப்பட்டது.

நிதி அமைச்சின் செயலாளர் ஆர். பாஸ்கரலிங்கம் தலைமையில் நடந்த அந்தக் கூட்டத்தில் சமூகசேவைகள் அமைச்சின் அதிகாரிகள் பாதுகாப்புச் சபையின் அதிகாரிகள் மற்றும் யாழ். அரச அதிபர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கடந்த மாதம் படையினர் மேற்கொண்ட "யாழ்தேவி" நடவடிக்கையின் விளைவாக குடாநாட்டில் சுமார் 80 ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த 2 லட்சத்து 60 ஆயிரம் பேர் இடம்பெயர்ந்து அகதிகளாகி இருப்பதாகவும் —

இராணுவ நடவடிக்கை இடம்பெற்ற சமயம் அதனால் பாதிக்கப்பட்ட குழந்தைகள், முதியோர், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் நோயாளர்களுக்கு அவசர நிவாரண நடவடிக்கையில் ஈடுபட்ட வாகனங்கள் கூட விமானங்களினதும், ஹெலிகொப்டர்களினதும் குண்டு வீச்சுத் தாக்குதல்களுக்கு இலக்காகின என்றும் ஜனாதிபதிக்குச் சமர்ப்பித்த அந்த அறிக்கையில் யாழ். அரச அதிபர் குறிப்பிட்டுள்ளார்.

அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

யாழ்தேவி இராணுவ நடவடிக்கையின் விளைவாக கிளிநொச்சியின் பச்சிலைப்பள்ளி பகுதியும், யாழ் மாவட்டத்தின் கோப்பாய், சாவகச்சேரி பகுதிகளும் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

மிகக் குறைந்த வருமானம் பெறும் வகுப்பைச் சேர்ந்த வறிய குடும்பங்களே இந்த இராணுவ நடவடிக்கையால் மேலும்பாதிக்கப்பட்டுள்ளன. அவர்களின் தற்போதைய நிலை மிக மோசமடைந்திருக்கிறது

'யாழ்தேவி' இராணுவ நடவடிக்கை இடம்பெற்ற பகுதியில் அமைந்திருந்த அகதி முகாம் ஒன்றுஅந் நடவடிக்கை காரணமாக மூடப்பட்டிருப்பதால் அங்கிருந்த 849 அகதிகள் வேறு இடம்தேடி ஓட வேண்டி இருந்தது. தற்போது கோவில்கள், பாடசாலைகள் என்பவற்றில் தங்கியிருக்கும் அந்த அகதிகளுக்கு பாதிக்கப்படாத பகுதியில் அகதிமுகாம் ஒன்றைத் திறக்க வேண்டியுள்ளது.

'யாழ்தேவி' இராணுவ நடவடிக்கையால் 41 பொதுமக்கள் கொல்லப்பட்டதுடன், 83 பேர் காயமடைந்தனர். கடுதலானோர் விமான, ஹெலிக்கொப்டர் குண்டு வீச்சினாலும், ஷெல் தாக்குதல்களினாலுமே உயிரிழந்துள்ளனர். வீடுகள் மாத்திரமன்றி கோவில்கள், திருச்சபைகள் போன்ற வழிபாட்டுத் தலங்களும் சேதமடைந்துள்ளன.

மக்களுக்கும் சொத்துக்களுக்கும் பேரழிவைக் கொண்டுவரும் இந்த அர்த்தமற்ற யுத்தம் நிறுத்தப்பட வேண்டும்— இவ்வாறு யாழ். அரச அதிபரின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வழக்கு தாக்கல் செய்ய முடியாத நிலைமை

கொழும்பு, ஒக். 27

வவுனியாவில் படையினரால் நீண்ட காலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள சுமார் 80க்கு மேற்பட்டோருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது.

வவுனியாவில் மேல் நீதிமன்றம் இல்லாததே இதற்குக் காரணம்

வடக்கே எடுத்துச் செல்லத் தடைவிதிக்கப்பட்ட பொருள்களை தாண்டிக்குளம் ஊடாக எடுத்துச்செல்ல முயன்ற குற்றச்சாட்டின் பேரில் இவர்கள் நீண்ட நாட்களாக வவுனியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (இ-5)

# விளையாட்டு நிகழ்வுகள்

யாழ். ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகம் சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடத்திவரும் கடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் இன்று மாலை நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் கழக அணிகள் வருமாறு!-

★ 3.30 மணி: ஜொனியன்ஸ் சிவப்பு அணி எதிர் பற்றிஷியன் பச்சை அணி.

★ 4.30 மணி: சென்றலைட்ஸ் சொக்ஸ் அணி எதிர் ஜொனியன்ஸ் கறுப்பு அணி.

o o o

யாழ். மத்திய கல்லூரி அணிக்கும் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான உதைபந்தாட்டம் இன்று மாலை 4 மணிக்கு யாழ். மத்தியகல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

o o o

யாழ். கல்வித் திணைக்களம் யாழ். மாவட்டப் பாடசாலைகளின் 15 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையில் நடத்திவரும் மாவட்ட நிலை உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் 2.30 மணி முதல் பல்வேறு பாடசாலை மைதானங்களில் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் கழக அணிகள் வருமாறு!

கொக்குவில் இந்துவில்

★ கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி. எதிர் சென். ஜோசப் ம.வி.

★ யாழ். இந்து எதிர் சென். ஹென்றிஸ்.

★ யூனியன் கல்லூரி எதிர் உருப்பராய் இந்து.

நெல்லியடி ம.ம.வியில்

★ புங்குடுதீவு ம.வி. எதிர் தேவரையாளி இந்து.

★ இளவாலை அ.த.க.பா. எதிர் சண்டிலிப்பாய் இந்து.

ஹாட்லியில்

★ அருணோதயா எதிர் உருப்பராய் அ.மி.க.

★ இளவாலை மெய்கண்டான் எதிர் நெல்லியடி ம.ம.வி.

மட்டுவில் ம.வியில்

★ சாவகச்சேரி இந்து எதிர் விக்னேஸ்வரா

★ டிறிபேர்க் எதிர் புங்குடுதீவு சண்முகானந்தா.

★ கனகரத்தினம் ம.வி. எதிர் மட்டுவில் ம.வி.

# கிளிநொச்சியில் நேற்று ஆர்ப்பாட்டப் பேரணி

யாழ்ப்பாணம், ஒக். 27

பல்கலைக் கழக அனுமதிக்கான வெட்டுப்புள்ளி முறையைக் கண்டித்து நேற்று கிளிநொச்சியில் மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணியும், கண்டனப் பொதுக் கூட்டமும் நடைபெற்றன.

கிளிநொச்சி விவசாய பீட மாணவர்கள், கிளிநொச்சிக் கோட்டப் பாடசாலை மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள், ஆசிரியர்கள் உட்பட ஆயிரக் கணக்கானோர் பேரணியில் கலந்து கொண்டனர்.

பேரணி பிற்பகல் 1-45 மணியளவில் கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றலில் இருந்து ஆரம்பித்து பிற்பகல் 3 மணியளவில் கிளிநொச்சி கல்வி அதிகாரி பணிமனையை சென்றடைந்தது. அதனைத் தொடர்ந்து அங்கு கண்டனப் பொதுக் கூட்டம் நடைபெற்றது. (உ-த)

## அலுவலகம் இடமாற்றம்

கழியூரத்தில் இயங்கி வந்த வோரும் யாழ். மேற்கு இணை அலுவலகம் தற்போது வட்டு-கிழக்கு சித்தன்கேணியில் இயங்குகிறது. (உ-161)

# மெதடிஸ்தகுருமார்குழுவின் யாழ். வருகை ஒத்திவைப்பு

நேற்று யாழ்ப்பாணம் வரவிருந்த — 20 பேர் கொண்ட — மெதடிஸ்த திருச்சபையின் குருமார் குழுவின் விஜயம் எதிர்வரும் 9 திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இக்குழுவில் அங்கம் வகித்து இங்கு வரவிருந்த ஜேர்மன், பிரிட்டன் மெதடிஸ்த சபைகளின் குருமார்கள் கொழும்பு வந்து சேருவதில் ஏற்பட்ட தாமதத்தாலேயே அவர்களின் யாழ். விஜயம் பின்போடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

அடுத்த மாதம் 9 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரை இக்குழுவினர் இங்கு தங்கியிருப்பர் என்றும் கூறப்பட்டது. (உ-8)

சர்வசன வாக்கெடுப்பு விவகாரம்

# தெரிவுகுழு யோசனைக்கு சு.கவின்எம்.பிக்கள் எதிர்ப்பு

யாழ்ப்பாணம், ஒக். 27

"வடக்கு-கிழக்கு மாகாணங்களின் இணைப்பு தொடர்பாக நீதியானதும், சுதந்திரமானதுமான சர்வசன வாக்கெடுப்பை நடத்தக்கூடிய சூழ்நிலை கிழக்கில் தற்போது இல்லை என்பதால் சர்வசன வாக்கெடுப்பு குறித்த நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் சிபார்சை நடைமுறைப்படுத்தக் கூடாது"

மேற்கண்டவாறு தெரிவுக் குழுவில் அங்கம் வகிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எம். பிக்கள் கோரியிருப்பதாக கொழும்புத் தமிழ் வார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

வடக்கு-கிழக்கு இணைப்பின் எதிர்காலம் குறித்துத் தீர்மானிப்பதற்காக கிழக்கில் அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதம் சர்வசன வாக்கெடுப்பை நடத்த வேண்டும் என தனது இறுதி அறிக்கையில் தெரிவுக்குழு சிபார்சு செய்ய இருப்பதாகவும் —

தெரிவுக் குழுவின் அறிக்கையை அதன் தலைவர் திரு. மங்கள முனசிங்கா அடுத்த மாதம் 9ஆம் திகதி சபாநாயகர் எம். எச். முஹம்மதுவிடம் சமர்ப்பிக்கவுள்ளார் என்றும் அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

## ஆள்பலம்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஹெலிக்கொப்டர்களை கொள்வனவு செய்வது தொடர்பாக சுருக்கத் தெரிவிக்கையில் விமானப்படைத் தளபதி ரேறன் குணதிலக மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார் என்று "சண்டே டைம்ஸ்" செய்தி வெளியிட்டுள்ளது.

கேள்விப்பத்திரம் சமர்ப்பித்த உள்ள ஒருவர் "சண்டே டைம்ஸ்" பத்திரிகைக்கு கருத்துத் தெரிவிக்கையில் ரஷ்யாவில் இருந்து கொள்வனவு செய்யப்பட உள்ள மூன்று ஹெலிக்கொப்டர்களும் குண்டுவீசக்கூடிய வசதி தகவுடன் பொருத்தப்பட்டவையாக இருக்க வேண்டும் என்று கேட்கப்பட்டுள்ளது.

எனினும் ஒரு ஹெலிக்கொப்டரின் உள்ளே "டீலக்ஸ்" வசதிகள் செய்யப்படும்.

மிக உயர் அதிகாரி பயணம் செய்வதற்காக "டீலக்ஸ்" வசதி பொருத்தப்படும் என்று தெரிவித்தார்.

விமானப்படை முன்னர் 8 எம் ஐ-8 ஹெலிக்கொப்டர்களை 45 லட்சம் அமெரிக்க டொலர்களுக்கு வாங்கியிருந்தது.

எம் ஐ 17 IV ஹெலிக்கொப்டர்களின் விலை இதனிலும் பார்க்க மிக அதிகமாக இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-எ)

நிழலை உமிழ்தாலும் எருப்போட வேண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

